வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 04.06.2025 நேரம் மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

- நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர், அடுத்த மாதம் 21ஆம் தேதி தொடங்க உள்ளது.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, புதுடெல்லியில், சிறப்பு மரம் நடும் இயக்கத்திற்கு தலைமையேற்கிறார்.
- தீவிரவாதத்திற்கு எதிரான நிலைப்பாடுகளை வெளிநாடுகளிடம் எடுத்துக் கூறுவதற்கான அனைத்து கட்சி குழுக்களில், இதுவரை 4 குழுக்கள், பணிகளை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி உள்ளன.
- புதுச்சேரியில், வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம், நல்லவாடு, ஆண்டியார்பாளையம், அரியாங்குப்பம் மணவெளி ஆகிய கிராமங்களில், இன்று நடைபெற்றது.

---

***நாடாளுமன்றம் (7)***

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர், அடுத்த மாதம் 21ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 12ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். பகல்ஹாம் தீவிரவாத தாக்குதல், மற்றும், அதற்கு பதிலடியாக இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடர்ந்து முதல்முறையாக, நாடாளுமன்றம், மழைக்கால கூட்டத் தொடராகக் கூட்டப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

-------------------------

<u>*மோடி சுற்றுச் சூழல்*</u> (14)

உலக சுற்றுச் சூழல் தினமான நாளை, புதுடெல்லியில் உள்ள பகவான் மகாவீர் வனஸ்தாலி பூங்காவில் நடைபெற உள்ள சிறப்பு மரம் நடும் இயக்கத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி,தலைமையேற்கிறார். தாயின் பெயரால் ஒரு மரம் இயக்கத்தின் கீழ், மரக்கன்று ஒன்றை அவர் நடுகிறார். ஆரவல்லி மலைத் தொடர் நெடுகிலும் வன வளர்ப்புப் பணிகள் மூலம், 700 கி.மீ பசுமை சுவர் ஒன்றை அமைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்த சிறப்பு மரம் நடும் இயக்கம் அமைகிறது. இந்த பசுமை சுவர் திட்டத்தினால், டெல்லி, ராஜஸ்தான், ஹரியானா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு உட்பட்ட 29 மாவட்டங்களில், பசுமை பரப்பு அதிகரிக்கும் என்றும், மண் வளம், நீர்வளம், மற்றும், சுற்றுச் சூழல் மேம்படுவதுடன், மக்களுக்கான வருவாய் வாய்ப்புகள் பெருகும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை, டெல்லி அரசின் நீடித்த போக்குவரத்து திட்டத்தின் கீழ், டெல்லி நகரின் போக்குவரத்துத் தேவைகளுக்கான 200 மின்சார பேருந்துகளையும், கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

-------------------------

<u>*மோடி-ஜம்மு-காஷ்மீர்*</u> (16)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 6ஆம் தேதி ஜம்மு-காஷ்மீருக்கு பயணம் மேற்கொண்டு, மொத்தம் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார். வைஷ்ணவ் தேவி கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக, ஸ்ரீநகர்-கத்ரா இடையே இயக்கப்பட உள்ள 2 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களையும், பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். ஜம்மு-காஷ்மீரில் பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள செனாப் ரயில்வே பாலமும், இரும்புக்

கேபிள்களால் தாங்கப்படும் வகையில், நாட்டிலேயே முதல்முறையாக கட்டப் பட்டுள்ள அஞ்சி கட் பாலமும் அடங்கும். காஷ்மீர் பள்ளத்தாக்கை நாட்டின் இதர பகுதிகளுடன் இணைக்கும் வகையிலான உத்தம்பூர்-ஸ்ரீநகர்-பாராமுல்லா ரயில் இணைப்புத் திட்டத்தையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். எல்லைப் பகுதிகளுக்கான போக்குவரத்து தொடர்புகளை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு சாலை அமைப்புத் திட்டங்களுக்கும், கத்ராவில், வைஷ்ணோ தேவி செவ்வியல் மருத்துவக் கழகம் அமைக்கும் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*<u>அனைத்துக் கட்சி</u>*-1 (5)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் வலுவான நிலைப்பாடுகளை, வெளிநாடுகளிடம் எடுத்துக் கூறுவதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிக் குழுக்களில், இதுவரை 4 குழுக்கள், பணிகளை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பி உள்ளன. இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*<u>அனைத்துக் கட்சி 2</u>* (16)

(வாய்ஸ்)

<u>சிவசேனா எம்பி திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், ஐக்கிய அரபு அமீரகம், லைபீரியா, சியாரா லியோன் உள்ளிட்ட நாடுகளுக்கான தங்களின் பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று காலை புதுடெல்லி திரும்பினர். தேசியவாத காங்கிரஸ் எம்பி திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர், கத்தார், தென்ஆப்ரிக்கா, எகிப்து உள்ளிட்ட நாடுகளுக்கான பயணத்தை தொடர்ந்து இன்று மாலை தாயகம் திரும்புகிறார்கள். பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான</u>

குழுவினர், இன்று பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ்-சில், ஐரோப்பிய யூனியன் தலைமையகத்தில், இந்தியாவின் நிலைப்பாடுகள் குறித்து கூட்டம் நடத்தினர். காங்கிரஸ் எம்.பி டாக்டர் சசி தரூர் தலைமையிலான குழுவினர், பல்வேறு நாடுகளுக்கான தங்களின் பயணத்தின் கடைசி கட்டமாக, இன்று அமெரிக்கா சென்று சேர்ந்துள்ளனர். வாஷிங்டன்னில், அமெரிக்க நாடாளுமன்றம், நிர்வாகம் மற்றும் ஊடகத் துறை பிரதிநிதிகளை இவர்கள் சந்தித்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தயாவின் உ றுதியான நிலைப்பாடுகளை எடுத்துக் கூட உள்ளனர்.

--------------------------

மோடி எரிசக்தி 1 (9)

மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி ஆகியோர் இன்று நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். கடந்த 11 ஆண்டுகளில், இவ்விரு துறைகளும் முக்கிய மாற்றங்களை கண்டுள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார். எரிசக்தித் துறையில், விலை மலிவான தூய எரிபொருள் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதாகவும், சுயசார்பை எட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

--------------------------

புதுச்சேரி விவசாயம் (12)

புதுச்சேரியில், வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம், நல்லவாடு, ஆண்டியார்பாளையம், அரியாங்குப்பம் மணவெளி ஆகிய கிராமங்களில் இன்று நடைபெற்றது. மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு கழக விஞ்ஞானிகள் டாக்டர் கே. ஜெயந்தி, டாக்டர் எம். குமரன், வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப அதிகாரிகள் டாக்டர் மணிமேகலை, திருமதி ஆர். ஸ்ரீவித்யா, தவளக்குப்பம்

வேளாண் அலுவலர் திரு. தண்டபாணி உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டு, வேளாண் விழிப்புணர்வு தகவல்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். விவசாயிகள், தங்களின் சந்தேகங்களை நிபுணர்களிடம் கேட்டு விளக்கம் பெற்றனர். அரியாங்குப்பம் மணவெளியில் நடைபெற்ற, வேளாண் வளர்ச்சி பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்டு பயன் பெற்ற பெண் விவசாயி ராஜலட்சுமி எமது செய்தியாளரிடம் பேசுகையில்....

(வாய்ஸ்-ராஜலட்சுமி)

-------------------------

***காரைக்கால் விவசாயம் (7)***

காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியில், 2004ஆம் ஆண்டு சேர்க்கை பெற்ற, இளங்கலை பட்டப் படிப்பு மாணவ-மாணவியர் 94 பேர், களப் பயிற்சியின் ஒருபகுதியாக இன்று, நாகை மாவட்டம் சிக்கல் கிராமத்தில், மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சதீஷ்குமார் உள்ளிட்ட நிபுணர்களுடன் இணைந்து, மத்திய அரசின் விக்சித் கிரிஷி சங்கல்ப அபியான் இயக்கத்தின் கீழ், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.

-------------------------

***பரம்வீர் சக்ரா-1 (7)***

ஆபரேஷன் சிந்துார் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1947 – 48 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது, அளப்பரிய துணிச்சலை வெளிப்படுத்தி, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, Second Lieutenant ராம ரகோபா ராணே குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

(வாய்ஸ்)

*பரம்வீர் சக்ரா*-2 (18)

(வாய்ஸ்)

1918ஆம் ஆண்டு கர்நாடகத்தில் பிறந்தவரான செகண்ட் லெப்டினென்ட் ராம ரகோபா ராணே, 1947ஆம் ஆண்டில், பொறியாளர் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர் ஆவார். 21 ஆண்டுகால ராணுவ சேவையில், சிறந்த சேவைக்கான அதிகாரிகளின் தலைமையகக் குறிப்பில், 5 முறை அவரது பெயர் இடம்பெற்றுள்ளது. 1947-48ஆம் ஆண்டு, இந்தோ-பாக் போரின் போது, 1948ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஜங்கார் பகுதியை இந்திய ராணுவம் மீண்டும் கைப்பற்றியதை தொடர்ந்து, சிவிலியன்களை எதிரிப் படையினரின் அத்துமீறல்களில் இருந்து காப்பதற்காக இந்தியப் படையினர், நவ்ஷாராவில் இருந்து, ராஜோரிக்கு முன்னேறிச் செல்ல திட்டமிடப்பட்டது. ஏப்ரல் 8ஆம் தேதி, 4ஆவது டோக்ரா படைக் குழுவினர் எதிரிகள் மீதான தங்களின் தாக்குதல்களை தொடக்கிய போதிலும், எதிரிப் படையினர் உருவாக்கி இருந்த சாலைத் தடைகள், மற்றும், கண்ணி வெடிகளால், அவர்களின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. 4ஆவது டோக்ரா படைக் குழுவுடன் சேர்த்து அனுப்பப்பட்ட 37ஆவது போர்க்களத் தாக்குதல் கம்பெனியின் ஒரு பிரிவுக்கு தலைவராக அப்போது இருந்த ராம ரகோபா ராணே, எதிரிகளின் குண்டு வீச்சுகளுக்கு இடையே, அபார துணிச்சல் மற்றும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். ஏப்ரல் 8ஆம் தேதி அவருக்கு

*பரம்வீர் சக்ரா*-3 (11)

காயம் ஏற்பட்ட போதிலும், எதிரிகளின் கண்ணி வெடிகள் மற்றும் சாலை தடைகளை அகற்றுவதில், அவர் தொடர்ந்து ஈடுபட்டு, இந்திய டாங்கிகளின் நடமாட்டத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தார். அடுத்த 3 நாட்களிலும், எதிரிகளின் குண்டு வீச்சுக்கு இடையிலேயே அவர் பல்வேறு வழிகளில் சென்று, சாலைத் தடைகள் பலவற்றை தானே தகர்த்து அகற்றினார். இந்தியப் படைகள் ரஜோரிக்கு முன்னேறி, எதிரிப் படைகளுக்கு கடும் இழப்புகளை ஏற்படுத்தி, பல சிவிலியன்களின்

உயிர்களை காப்பாற்றியதில், ராணேயின் அயராத முயற்சிகள்தான், முக்கிய வகித்தன. இத்தகைய அபாரத் துணிச்சல் மற்றும் மன உறுதிக்காக, செகண்ட் லெப்டினென்ட் ராம ரகோபா ராணே-விற்கு, பரம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

--------------------------

*வானிலை (10)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, மேலும் சில நாட்களுக்கு தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மழை நீடிக்கலாம் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 6ஆம் தேதி வரை வெப்பநிலை ஓரிரு இடங்களில், 2 டிகிரி செல்சியஸ் வரை, படிப்படியாக உயரக் கூடும் என்றும், வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக உள்ள நிலையில், ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, சென்னை பாரிமுனை மண்டலத்தில், 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 1 செ.மீ, பாகூர் மற்றும் திருக்கனூரில், 2 செ.மீட்டர் மழை பெய்துள்ளது.

--------------------------

வடகிழக்கு வெள்ளம் (12)

வடகிழக்கு மாநிலங்கள் மழை-வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ள நிலையில், அசாமில், 21 மாவட்டங்களைச் சேர்ந்த 6 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், தொடர்ந்து வெள்ளத்தில் சிக்கி உள்ளனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை 12ஆக அதிகரித்துள்ளது. 223 இடங்களில், நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, 40 ஆயிரம் பேர் தங்க வைக்கப் பட்டுள்ளனர். மாநிலத்தில், ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட கிராமங்களில், சுமார் 14 ஆயிரத்து 700 ஹெக்டேர் நிலங்களில், பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தொடர்ந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே சிக்கிமில்

**மழை வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட மங்கன் மாவட்டத்தில் இருந்து மக்களை மீட்கும் பணிகள், சாதகமற்ற வானிலை காரணமாக தடை பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.**

**--------------------------**